**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.113/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : மினிப்பிரியா | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : செந்தூர்பாண்டியன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

05.02.2026

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் கருமல் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 08.08.2024ம் தேதியன்று மதியம் 02.00 மணியளவில் எனது கணவர் செந்தூர்பாண்டியன் வேலை விஷயமாக சந்தைக்கு செல்லவேண்டும் என்று என்னிடம் கூறிவிட்டு அவருக்கு சொந்தமான TVS XL இருசக்கர வாகனத்தில் வெளியே சென்றார். அன்றைய தினம் மாலை 04.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது கொழுந்தனார் மாதவன் எனக்கு போன்செய்து எனது கணவருக்கு சமத்துவபுரத்தில் உள்ள ஒயின்ஷாப்பிற்கு முன்பு உள்ள ரோட்டில் விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும் ஆட்டோவில் அவரை ஏற்றி முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பதாகவும் தகவல் தெரிவித்தார்.

பிறகு நான் கிளம்பியிருந்தேன். எனது கொழுந்தனார் வந்து என்னை அழைத்துக்கொண்டு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். அங்கு எனது கணவர் சிகிச்சையில் இருந்தார். அவரை நான் பார்த்தபோது மயக்கநிலையில் இருந்தார். மருத்துவர்கள் எனது கணவரை ராமநாதபுரம் அரசு

மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அழைத்து செல்ல பரிந்துரைத்தார்கள். அதன்பேரில் அவரை நாங்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிக்சைக்கு சேர்த்தோம். எனது கணவரை ஆட்டோவில் ஏற்றி முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டு வந்த காமாட்சிகண்ணன் மற்றும் சரவணன் ஆகியோர்கள் என்னிடம் ஆஜர் எதிரியானவர் பெரிய பைக்கில் வடக்கிலிருந்து தெற்காக வந்து, கிழக்கிலிருந்து மேற்காக வந்த எனது கணவரின் இருசக்கர வாகனத்தில் மோதியதால் எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டது என்று கூறினார்கள்.

எனது கணவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தபோது அங்குள்ள மருத்துவர்களும் எனது கணவரை மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல பரிந்துரை செய்ததால் அவரை அன்றைய தினமே இரவு 11.00 மணியளவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்து சென்றோம். நாங்கள் சென்றபோது அதிகாலை 03.00 மணி ஆகிவிட்டது. மதுரை அரசு மருத்துவமனையில் எனது கணவருக்கு உதவியாக நான் இருந்தபோது சம்பவத்திற்கு மறுநாள் மதியம் 12.00 மணியளவில் போலிசார் வந்து என்னை விசாரித்தபோது நான் நடந்த சம்பவத்தை புகாராக எழுதிக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது கணவரை மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்த பின்னிட்டு 10 நாட்கள் கழித்து ஆஜர் எதிரியானவர் மருத்துவமனைக்கு வந்து எனது கணவரை பார்த்தார் அப்போது தான் நான் எதிரியை தெரிந்துகொண்டேன். எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக எனக்கு போன் வந்தது. யார் என்பது தெரியவில்லை. எனது கொழுந்தனார் தகவல் தெரிந்து எனது வீட்டிற்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு நாங்கள் இருவரும் சென்றோம். விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டதற்கு பின்னிட்டு நானும், எனது கொழுந்தனாரும் வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். எதிரியின்வீடு காக்கூரில் உள்ளது என்றால் சரிதான். அதே காக்கூரில் எங்களுக்கு

சொந்தமான ஒரு வீடு இருப்பதால் நான் அடிக்கடி கருமலில் இருந்து காக்கூருக்கு செல்வேன் என்றால் சரிதான். நானும், எனது கணவரும் அடிக்கடி எங்களது வேலை சம்மந்தமாக கருமலில் இருந்து முதுகுளத்தூருக்கு செல்வோம் என்றால் சரிதான். அதனால் விபத்து நடந்த இடம் எந்த இடம் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். இராமநாதபுரத்திலிருந்து முதுகுளத்தூர் செல்லக்கூடிய நெடுங்சாலையில் ரோட்டின் தென்புறம் ஒயின்ஷாப் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

ஒயின்ஷாப்பானது ரோட்டிலிருந்து தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஒயின்ஷாப்பிலிருந்து ரோட்டிற்கு செல்லவேண்டும் என்றால் இருசக்கர வாகனத்தை மெதுவாக இயக்கிதான் ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் சரிதான். எதிரியின் செயலால் விபத்து நேரவில்லை என்றாலும் எனது கணவர் தான் கவனக்குறைவாக வந்து எதிரியின் மீது வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

STC.No.113/2025
Prosecution witness.02

பெயர் : செந்தூர்பாண்டியன் தொழில் :

தந்தை/கணவர் பெயர் : செல்வராஜ் கிராமம் :

வயது : தாலுகா :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>05.02.2026</u>

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

நான் கருமல் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா.1 எனது மனைவி ஆவார். 08.08.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் நான் எனக்கு சொந்தமான TN 65 AV 6843 என்ற பதிவுஎண் கொண்ட TVS XL இருசக்கர வாகனத்தில் கருமலில் இருந்து முதுகுளத்தூர் சந்தைநோக்கி சென்று கொண்டிருந்தபோது காக்கூரில் உள்ள ஒயின்ஷாப்பிற்கு அருகே எனக்கு எதிர்புறமாக ஆஜர் எதிரியானவர் ஒரு பெரிய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து எனது இருசக்கர வாகனத்தின் முன்புறம் மோதியதில் நான் நிலைதடுமாறி கீழே விழுந்து எனக்கு முன்னந்தலையில் அடிபட்டு நான் மயங்கிவிட்டேன். நான் மீண்டும் கண்விழித்து பார்த்தபோது மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நான் கண்விழித்துபார்த்தபோது எனது மனைவியான அசா.1 மற்றும் அம்மா, அப்பா ஆகியோர்கள் உடன் இருந்தார்கள்.

சம்பவம் தொடர்பாக எனது மனைவி புகார் அளித்தார் என்பதை தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த பிறகு என்னை காமாட்சிகண்ணன் என்பவரும், எனது தம்பி மாதவனும் சேர்ந்து என்னை ஆட்டோவில் ஏற்றினார்கள். அதுவரையில் நான் சுயநினைவோடு இருந்தேன். காமாட்சிகண்ணனும், எனது தம்பி மாதவனும் சம்பவம் நடந்த பிறகு அரைமணிநேரத்திலிருந்து ஒரு மணிநேரத்திற்குள் சம்பவ இடத்திற்கு வந்திருப்பார்கள். அதுவரையில் அக்கம்பக்கத்தில் இருந்த யாருமே என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல உட்படவில்லை என்றால் சரிதான். நான் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக என்னை அழைத்து சென்றபோது சுயநினைவுடன் இருந்தேனா என்றால் இல்லை. மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோதும் எனக்கு சுயநினைவு இல்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்று தோராயமாக 25 நாட்கள் கழித்து தான் எனக்கு சுயநினைவு வந்தது. முதுகுளத்தூர் போலிசார் எப்போது எந்த தேதியில் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்பது எனக்கு தெரியாது.

யார் புகார் அளித்தார்கள் என்பதும் போலிசார் யார் யாரை விசாரித்தார்கள் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அன்றைய தினம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். எதிரியானவர் ரோட்டின் தென்புறம் உள்ள மதுபானக்கடையிலிருந்து ரோட்டின் மேற்புறம் வந்தார் என்றால் சரிதான். ரோட்டிலிருந்து மதுபானக்கடை தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாழ்வான பகுதியில் இருந்து மேடான பகுதியில் உள்ள ரோட்டிற்கு வாகனத்தை இயக்கி வரவேண்டும் என்றால் மெதுவாக தான் இயக்கவேண்டும் என்றால் சரியல்ல. மெதுவாகவும் வரலாம், வேகமாகவும் வரலாம். மதுபானக்கடையில் இருந்து மேடான பகுதியில் உள்ள ரோட்டிற்கு எதிரியானவர் மெதுவாகனத்தான் வாகனத்தை இயக்கிவந்தார் என்றாலும் நான் தான் அவர் வருவதை கவனிக்காமல் வேகமாக எனது இருசக்கர வாகனத்தில் வந்து ஆஜர் எதிரியின் வாகனத்தில் மோதிவிட்டேன் என்றாலும் சரியல்ல. விபத்தானது எதிரியின் செய்கையால் ஏற்படவில்லை என்றாலும், நான் தான் கவனக்குறைவாக விபத்து ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும்

வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.